பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 17 புதன்கிழமை 02.08.2023 கதிர் 264


# அடுத்த இரு மாதங்களும் வறட்சி வாட்டி வதைக்கும்

## வடக்கு, கிழக்கு மாகாணங்களில்



வடக்கு கிழக்கில் அடுத்துவரும் குறைந்தது இரண்டு மாதங்களுக்குக் கடும்வறட்சிவாட்டிவதைக்கும்என்று எதிர்வுகூறப்படுகின்றது. அண்மைக்காலத்தில் நாட்டில் மழை பெய்வதற்கான எந்த வாய்ப்புக்களுமில்லைஎன்றுவானிலையியல் பணிப்பாளர்நாயகம்ஏ.கே.கருணாநாயக்க தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு, வடமத்தி, ஊவா ஆகிய மாகாணங்களில் ஒக்டோபர் மாதம் தொடங்கவுள்ளபருவப்பெயர்ச்சிமழைக்கு முன்பாக மழை பெய்வதற்கான வாய்ப்புக் கள் இல்லை என்று அவர் தெரிவித்தார். இந்தப்பகுதிகளில்பருவமழைக்காலமான ஒக்டோபர், நவம்பர், டிசெம்பரில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படு 2



## இது ரகசியம் அல்ல!

நாடாளுமன்றம்என்பதுமீயுயர்அதிகாரம் கொண்டது இந்த நாட்டில். அதற்கென சில சிறப்புச் சலுகைகள் உரிமைகள் உண்டு. "நாடாளுமன்றச் சிறப்புரிமைகள்" என்று இதனைச் சொல்லிக்கொள்கிறார்கள். இலங்கை அரசமைப்பின்படி அப்படிப்பட்ட சிறப்புரிமைகள் என்று எதுவும் யாருக்கும் கிடையாது என்கிறபோதும், நாடாளுமன்றத்தின்உயர்மதிப்புக்கருதிஇவ்வாறு நாடாளுமன்றச் சிறப்புரிமை என்கிற பதம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

நாட்டினை ஆட்சி செய்யும் அரசவை என்றுநாடாளுமன்றத்தைச்சொன்னாலும் தவறில்லை. அங்குதான் மக்களின் தலைவிதிபெரும்பாலும்முடிவுசெய்யப்படுகின்றது. ஜனநாயகக்கொள்கைகளின்கீழ்எல்லோரும் இந்நாட்டின் மன்னர்களே என்பதற்கு ஏற்ப நாடாளுமன்றத்திற்குள் எவரு சென்றுவிட்டாலும்உள்ளே இருக்கும்வரை அவர் இந்நாட்டின் மன்னரே.

நாடாளுமன்றத்திற்குள் ஆற்றப்படும் உரைகளை வெளியே சட்டச் சவாலுக்கு உட்படுத்தவோ கேள்விக்குட்படுத்தவோ முடியாது. இதனைப் பயன்படுத்தியே வெளியே பேசப்படமுடியாத பல விடயங்களும் நாடாளுமன்றத்திற்குள் பேசப்படுகின்றன. (உறுப்பினர்கள் 2

## பஸ் கட்டணம் குறையாது

லங்கா ஒட்டோ டீசல் விலை இரண்டு ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளபோதும் பஸ் கட்டணத்தை குறைக்க முடியாது என இலங்கை தனியார் பஸ் உரிமைகள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

பஸ்கட்டணதிருத்தம்தொடர்பில்கருத்துத் தெரிவித் அவர்,.

பஸ் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு டீசல் விலையினை 15 முதல் 25 ரூபாவினால் குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். 2

## கரும்புச் செய்கைக்கான திட்டம் வவுனியாவில் பொருத்தமற்றது

### 2018இலேயே மாவட்டச் செயலர் கடிதம்

(ந.லோகதயாளன்.)

வவுனியா வடக்கில் கரும்புச்செய்கை என்பதுஓர் பொறுத்தமற்றதிட்டம்எனவே அதனை சொய்ய முடியாது என மாவட்டச் செயலர் நிராகரித்த திட்டத்தையே தற்போது நடைமுறைப்படுத்துவதற்கு ரெலோவும் ஜனாதிபதியும் முயற்சிக்கின்றனர்என்றுகுற்றஞ்சாட்டப்படுகின்றது.

வவுனியா வடக்கில் கரும்புச்செய்கைதொடர்பில் 2017ஆம் ஆண்டு பிரஸ்தாபிக்கப்பட்ட சமயம் இதன் சாத்தியப்பாட்டை சமர்ப்பிக்குமாறு 2018ஆம் ஆண்டு செப்ரெம்பர் 27 மாவட்டச்செயலிடம்அறிக்கை கோரப்பட்டுள்ளது. அதற்கு 2018 ஒக்டோபர் 1திகதியிட்டு பதில் கடிதம் எழுதியுள்ளார் அப்போதைய மாவட்டச்

அப்போதைய மாவட்ட அரச அதிபரான எல்.எம். ஹனீபா ஒப்பமிட்டு வழங்கியுள்ள அந்தக் கடிதத்தில் வவுனியா மாவட்டத்தில் கரும்புச் செய்கை பொருத்தமற்றுத என்று அந்தக் கடிதத்தில் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

மாவட்டச் செயலர் இவ்வாறு எழுதிய கடிதத்தில் இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையத்தின் அறிக்கையினைமேற்கோள் காட்டியே அவர் இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார்.

இப்படி நிராகரிக்கப்பட்ட திட்டத்தையே இப்போது மீண்டும் செயற்படுத்தி வவுனியா வடக்கில் கரும்புச்செய்கையை 2

## யாழ். பல்கலைக்கழகத்தினுள் புத்தர் சிலை வைத்து வழிபாடு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்பல்கலைக் கழகத்தில்நேற்றுபௌர்ணமி (போயா) தினத்தையொட்டி புத்தர் சிலை வைத்து வழிபாடுகள் இடம்பெற்றன.

பல்கலைக்கழகத்தில் கற்கும் சிங்கள மாணவர்களின் ஏற்பாட்டில் இந்த வழிபாடுகள் இடம்பெற்றன. இதற்காக பல்கலைக்கழகம் பௌத்த கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நாகவிகாரையிலிருந்து புத்தபிரானின் சிலை எடுத்து வரப்பட்டு பல்கலைக்கழகத்தில் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம்நாகவிகாரையின் விகாரபதியும்புத்தர் சிலையுடன் அழைத்து வரப்பட்டார்.பூசைவழிபாடுகளின. நிறைவில்புத்தர் சிலை மீண்டும் எடுத்துச் செல்லப்பட்டது.

## ஐதேக மத்தியகுழு இன்று கூடுகின்றது

ஐக்கியதேசியக்கட்சியின் மத்தியசெயற்குழுசிலமுக்கிய முடிவுகளை எடுப்பதற்காக இன்று புதன்கிழமை கூடவுள்ளது.

கட்சியின் தலைமையகமானசிறிகொத்தாவில் கட்சியின்தலைவர்ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில்இந்தஅவசரக் கூட்டம் நடைபெறவுள்ளது. கட்சியின் 77ஆவது தேசிய மாநாடு தொடர்பில் இதன்போது முடிவுகள் எடுக்கப்படவுள்ளது.

ஐ.தே.கவின் 77ஆவது தேசிய மாநாடு எதிர்வரும் செப்டம்பர் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த செயற்குழு கூட்டத்தில் மாநாடு நடைபெறும் இடம் மற்றும் நேரம், ஏனைய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது.

## 7 மாதங்களில் 800 மில். டொலர் சுற்றுலாவிகளால் வருமானம்

இவ்வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் 763,000 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்குவருகைதந்துள்ளனர் எனவும் இதன் மூலம் சுமார் 800 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிட்டியுள்ளது என்றும் சுற்றுலாத் துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார்.

சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டின்பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பஜனாதிபதிரணில் விக்ரமசிங்க முன்னெடுக்கும் வேலைத்திட்டம் வெற்றியடைந்துள்ளதுடன் அந்நியச் செலாவணியை அதிகரிக்க உதவியுள்ளதாகவும்அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் 2

## இந்திய – இலங்கை நிலத் தொடர்பு உறவுகளை மேம்படுத்த அவசியம்

### தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவிப்பு

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்துவதற்கு நிலத்தொடர்பு மிகவும் அவசியம் என இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

த ஹிந்து பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் அவர் மேலும்தெரிவித்துள்ளதாவது:

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் இருந்து நன்மையடையும், தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும் இலங்கையின எதிர்பார்ப்பானது இணைப்புப் பாதைகள், பாலங்கள், குழாய் கட்டமைப்புகள், மின்சார பரிமாற்றகட்டமைப்பு, விமான சேவைஉட்கட்டமைப்புகளை நிர்மாணிக்கும் ஆற்றலில் தங்கியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்திய பயணத்தின்போது கடல், விமானம், எரிசக்தி, வர்த்தகம் மற்றும் மக்களிடையேயான தொடர்புகளை உள்ளடக்கிய பொருளாதார பங்காளித்துவ நோக்குஅறிக்கையினைஇரு நாடுகளும்வெளியிட்டுள்ளன.

அத்துடன், அதிகாரப் பகிர்விற்கான 13 ஆவது திருத்தத்தினை அமுல்படுத்துவது குறித்த இந்தியாவின் நிலைப்பாடுதொடர்பில்இந்திய பிரதமர்நரேந்திரமோடியுடன், ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க கலந்துரையாடியுள்ளார்.

இந்த நிலையில், தமிழர்களின் பிரச்சினைக்கு இலங்கைக்குள்ளேயேதீர்வு காணப்பட வேண்டும்.

திருகோணமலை மற்றும் கொழும்பு துறைமுகங்களுக்கான நில அணுகலை மேம்படுத்துவதற்கும், இரு நாடுகளிலும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும், இரு நாடுகளுக்கிடையிலான பல்லாயிரம் ஆண்டுகால உறவை மேலும்வலுப்படுத்துவதற்கும் இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் நில தொடர்பை 2

## சரத் வீரசேகர எம்.பி. மீது சிவசேனை திடீர் பாய்ச்சல்

போர்வெற்றிக்குப்பின்னர் இலங்கையில் மதவெறியே வரலாறாகியுள்ளது என்று தெரிவித்துள்ள இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன், இந்துக் கோயில்களைத்தாக்கியோர் அழித்தோர் கொக்கிரித்தோர் வழியில்போரில்வெற்றிபெற்ற மதகளிப்பில், வெற்றியைக் கொண்டாடும்மெய்சிலிர்ப்பில் இலங்கை, சிங்கள புத்த நாடு என்கிறார் மேனாள் படைத் தளபதிசரத்வீரசேகராஎன்றும் சாடியுள்ளார்.

இது தொடர்பில் திடீரென நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது இலங்கை சிவசேனை அமைப்பு. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் உள்ளதாவது, நல்லாட்சி அரசில் சஜித் பிரேமதாசா அமைச்சராக இருந்தார். வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆயிரம் புத்தர் சிலைகளை அமைப்போம் எனக் கொக்கரித்தார்.

கடந்த சில வாரங்களாகவே மேனாள் படைத்தளபதி சரத் வீரசேகரா கொக்கரித்து வருகிறார். இலங்கை சிங்கள 2

## மோடி - ரணில் சந்திப்பு பற்றி இந்தியத் தூதரால் விளக்கம்

### தமிழ் எம்.பிக்களுடன் நேற்று சந்திப்பு

(ந.லோகதயாளன்.)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிரிக்கும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஜூலை21நடந்தபேச்சுக்களில் ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பில் இந்தியத் தூதர் கோபால் பாக்லே வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கு நேற்று விளக்கினார்.

கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில்நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த தூதுவர், பாரதப் பிரதமரால் இலங்கைஜனாதிபதியிடம்13 ஐ முழுமையாக அமுல்படுத்தல், உடனடியாக மாகாண சபை தேர்தல் நடத்துதல் மற்றும் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வு தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதாகஇருக்க வேண்டும்என்பனவலியுறுத்தப்பட்டதாகத் தெரிவித்தார்.

இந்தியப்பிரதமர்மற்றும் இலங்கை ஜனாதிபதிகளுடனான சந்திப்பில் இலங்கைக்கான தூதுவர் கோபால பாக்கிலேயும் கலந்துகொண்டிருந்தார். நேற்றையசந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், இ.சாள்ஸ் நிர்மலநாதன், கலையரசன், செல்வம் அடைக்கலநாதன்கோவிந்தன் கருணாகரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

## அஸ்வெசும திட்டத்தை செயற்படுத்த தீர்மானம்

### அமைச்சரவை எடுத்தது

நலன்புரி நன்மைகள் வேலைத்திட்டத்தின் கீழ் துரிதமாக நன்மைகளை செலுத்துவதற்கு ஏற்புடைய வகையில் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட வேலைத் திட்டத்திற்கு அமைச்சரவை உடன்பாடுவழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

அதற்கு அமைய

» நலன்புரி நன்மைகள் சபையால் அஸ்வெசும வேலைத்திட்டத்திற்கான ஆரம்ப சுற்றில் பயனாளிகள் 1,792,265 பேரைத் தெரிவு செய்துள்ளடன், அவர்களில் மேன்முறையீடு அல்லது ஆட்சேபனை கிடைக்கப் பெறாத பயனாளிகள் 1,588,835 பேருக்காக கொடுப்பனவுகளைச் செலுத்துதல்.

» பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டு, ஆனாலும் மேற்படி வகைகளில்உள்ளடக்கப்படுவதற்காக மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்துள்ள பயனாளிகள் 84,374 பேருக்கு அவர்களுடைய மேன்முறையீடுகளை மீளாய்வு செய்து இறுதித் தீர்மானத்தை வழங்கும் வரைக்கும் 2

## இனி இது .....

நாடாளுமன்றத்தில் அடிதடியில் இறங்குவது இந்தச் சிறப்புரிமைகளுக்குள்வராது) இப்படிநாடாளுமன்றம் இந்த நாட்டின்தனித்துவமானதொரு நிறுவனம். அதற்காக அது நாட்டின் சட்டதிட்டங்களுக்கு முற்றிலும்அப்பாற்றபட்டதல்ல.

நாடாளுமன்றத்தில்இருந்து அண்மையில் கிடைக்கப் பெறும் தகவல்கள், அங்கு பணியாற்றுவோரில் சிலர் நாடாளுமன்றத்தில் தாம் இருப்பதால் சட்டதிட்டங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் - எதுவேண்டுமானாலும் செய்யலாம் - என்று நினைத்துவிட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது. அவர்கள் நடந்து கொண்டிருக்கும் விதம் அப்படி.

நாடாளுமன்றத்தில் சுத்திகரிப்புப்பணிகளுக்கென பலர் பணியாற்றுகிறார்கள். இவர்கள்பலர் ஒப்பந்த அடிப்படையிலும் சிலர் நிரந்தரப் பணியாளர்கள்வரிசயைிலும் பணியாற்றுகின்றார்கள். இப்படிப் பணியாற்றுபவர்களில் அழகான இளம் பெண்கள் தொடர்ச்சியாக துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுவருகின்றார்கள் என்பதுதான் வெளியாகியிருக்கும் தகவல்கள்.

பணியாளர்கள் வழங்கும் தகவல்களின்படி, அழகான இளம் பெண்கள் வெவ்வேறு வகையான துன்புறுத்தல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்களாம். இது நீண்ட காலமாகவே நடந்து வருகின்றதாம். அழகான இளம் பெண்கள் இதற்கு ஒத்துழைக்கவில்லை என்றால் அவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டுப் பழிவாங்கப்படுவார்கள். சிலர் தமக்கு வேலைபோய்விடுமேஎன்கிற அச்சத்திலேயே முறைப்பாடு செய்வதில்லை.

இருந்தாலும் இந்த அச்சத்தையும் - அச்சுறுத்தலையும் - வக்கிரபுத்தி கொண்டவர்களின் வலையமைப்பையும் தாண்டி பெண்கள்குழு ஒன்று அதிகாரிகளின் இந்த மோசமான நடத்தை குறித்து அண்மையில் முறைப்பாடு செய்துள்ளது. இதையடுத்து, நாடாளுமன்றத்திலுள்ள பெண் உறுப்பினர்கள் அமையத்தின் தலைவரான கலாநிதி சுதர்ஷினி பெர்னான்டோபுள்ளே இந்த விடயத்தை நாடாளுமன்ற செயலாளர் நாயகம், சட்டத்தரணி குஷானி ரோகனதீரவின்கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளார். சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் தான் விசாரணைகளைமுன்னெடுத்துப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்று நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் உறுதியளித்துள்ளார். ''இந்த விடயம் அவ்வளவு இலகுவாக எடுத்துக்கொள்ளப் படமாட்டாது'' என்றும் அவர் தெரிவித்துள்ளார். அடுத்தடுத்த வாரங்களில் இந்த விவகாரத்தை நாடாளுமன்றத்தில் பிய்த்து உதற எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலர் தயாராகி வருகின்றனர்என்றும்கேள்வி. அழகிய பெண்கள் துன்புறுத்தப் பட்டுள்ளார்கள்என்றுகேள்விப் பட்டதில்அவர்களும்கொதித்துப் போய்த்தான் உள்ளனர். அந்தப் பெண்களுக்காக நீதியைநிலைநாட்டப்போராட அவர்கள் தயாராகிவிட்டனர்.

என்ன இருந்தாலும் பெருச்சாளிகள் அங்கிங்கெனாதபடிஎல்லாஇடங்களிலும் ஓடித் திரியத்தான் செய்கின்றன. இறுக்கமான நடவடிக்கைகள்தான் அவற்றைக் கட்டுப்படுத்தக்கூடும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 7 மாதங்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித் தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இவ்வருடம் இதுவரை சுமார் 763000 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இது சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 205% சதவீத வளர்ச்சியாகும். எமது நாட்டுக்கு அந்நியச் செலாவணி கிடைக்கும் பிரதான வழிமுறைகளில் ஒன்றாக சுற்றுலாத்துறை காணப்படுவதால் அதனை மேலும் மேம்படுத்தவதே எமது நோக்கம்.

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில், இரவு நேர பொருளாதார முறையை (Night Economy ) பின்பற்ற வேண்டும். ஒருவரின் வாழ்க்கையை சுதந்திரமாக அனுபவிக்க தேவையான வசதிகளை வழங்கும் இடமே சுற்றுலாத் தலமாகும். எனவே இரவு 10 மணிக்கு சுற்றுலா தலத்தை மூடினால் சுற்றுலாப் பயணிகள் வருகை தரமாட்டார்கள். இறந்த நகரங்களுக்கு (Death City) சுற்றுலாப் பயணிகள் வருவதில்லை. எனவே, நமது கடற்கரைகளை இரசிக்க வேண்டுமெனில் சுற்றுலாப் பயணிகள், இரவு முழுவதும் கடற்கரையில் தங்க வாய்ப்பளிக்க வேண்டும். அதற்கான சட்டங்கள் இயற்றப்படவேண்டும் - என்றார்.

## அஸ்வெசும....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ளவகைக்குரிய நலன்புரி நன்மைகளைச் செலுத்துதல்.

தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளில் 119,056 பேருக்கு எதிராக ஆட்சேபனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த ஆட்சேபனைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற மீளாய்வுச் செயன்முறை நிறைவு பெறும் வரைக்கும் அவர்களுக்குரிய நன்மைகளை செலுத்துதல்.

» வேலைத்திட்டத்தின் கீழ் நலன்புரி நன்மைகளுக்காக விண்ணப்பித்து, ஆனாலும் தெரிவு செய்யப்படாத, தற்போது சமுர்த்தி நலன்புரி நன்மைகளைப் பெறுகின்ற393,097பேருக்கு அஸ்வெசும வேலைத் திட்டத்தின் கீழ் ஆட்சேபனை மற்றும் மேன்முறையீட்டு செயன்முறை முழுமையாக நிறைவு பெறும் வரைக்கும் அவர்களுக்கு சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நலன்புரி நன்மைகளைச் செலுத்துதல்

» தற்போது சிறுநீரக உதவிக் கொடுப்பனவுகள் மற்றும் இயலாமையுடன் கூடிய நபர்களுக்கான உதவிக் கொடுப்பனவுகளைப் பெறுகின்ற பயனாளிகளுக்குப் பிரதேச செயலகத்தின் ஊடாக தொடர்ந்தும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் மற்றும் முதியோருக்கான உதவிக் கொடுப்பனவுகளை அஞ்சல் அலுவலகத்தின் ஊடாக தொடர்ந்தும் வழங்குதல்.

» பராமரிப்பு இல்லங்கள் அல்லது வணக்கத்தலங்களிலுள்ள சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், இயலாமையுடன் கூடிய நபர்கள்அல்லதுமுதியோர்கள் 11,660 பேருக்கு குறித்த உதவிக்கொடுப்பனவுகளைத் தொடர்ந்தும் செலுத்துதல் என்பவாகும்.

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்துவதற்கு இரு நாடுகளின் தலைவர்களும் தீர்மானம் மேற்கொண்டுள்ளனர் - என்றார்.

இதேவேளை, இரு நாடுகளுக்கும் இடையிலான நிலத்தொடர்புக்கு சேதுபாலம் அல்லது தமிழ் நாட்டை மன்னாருடன் இணைக்கும் ஆதாம்பாலத்தை பயன்படுத்துவதாஎன்பதுகுறித்துகருத்து தெரிவிக்க மறுத்துவிட்டார்.

## கரும்புச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டு, நெடுங்கேணி, நைனாமடுவில் சீனித் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்குவதற்கான திட்டத்தை ரெலோ கட்சியின் தலைவர் மற்றும் பேச்சாளர் ஆதரவுடன்ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க செயற்படுத்த முற்படுகிறார்.

## பஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோல் விலை அதிகரிப்பானது பொது மக்களிடையே மாற்று வாகன பயப்பாட்டினைக் குறைக்கும்.

இந்த நிலைமையானது தனியார் பஸ் தொழிற்துறைக்கு நல்லதொரு சந்தர்ப்பமாகும்.

டீசல் விலை இரண்டு ரூபாவினால் குறைக்கப்பட்ட போதும், அதன்சலுகையினை பயணிகளுக்கு வழங்க முடியாது.

பஸ் கட்டண தேசிய கொள்கையின்படி பஸ் கட்டணத்தை தற்போது நிர்ணயிப்பதற்கான சாத்தியமில்லை - என்றார்.

## சரத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புத்த நாடு. தீவு எங்கும் புத்தர் சிலைகளை வைப்போம் என்கிறார்.

போரில் வெற்றிக்குப் பின்னால் மத வெறியே வரலாறு.

மைசூரைக் கைப்பற்றினோம். மதுரையைக் கைப்பற்றுவோம் என 725 ஆண்டுகளின் முன் அலாவுதீன் கில்ஜியின் படைத்தளபதி மாலிக் கபூர் அதே மத வெறியுடன் தமிழகம் வந்தான்.

இந்துக் கோயில்களை அழித்தான். அங்குள்ள செல்வங்களைக் கொள்ளையடித்தான்.

தொடர்ந்து அறுபது ஆண்டுகள் தமிழகத்தில் முகமதியர் ஆட்சி. இந்துக் கோயில்கள் இடிந்தன. மசூதிகள் எழுந்தன. இராமநாதபுரத்தின் பெயரே இலாலாபாத் என மாறியது.

அயோத்தியில் பல்லாயிரம் ஆண்டுத் தொன்மையான இராமர் கோயிலை 400 ஆண்டுகளுக்கு முன்பு இடித்தவன் பாபர். அங்கே மசூதியைக் கட்டினான்.

பாபர் வழிவந்த அவுரங்கசீப் காசியில் அருள்மிகு விசுவநாதர் கோயிலை முற்றாக அழித்து அங்கே மசூதியைக் கட்டினான்.

அலாவுதீன்கில்ஜி, மாலிக் கபூர், பாபர், அவுரங்கசீப் போன்றோர் வரிசையில், போரின் வெற்றியை மத வெறியாக்குகிறார். அந்தப் படைத்தளபதிகளைப் போலவே இந்துக்களை நோக்கிக் கொக்கரிக்கிறார் சரத் வீரசேகரா. 450 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையின் தென்கோடியில், பல்லாயிரம் ஆண்டு பழமையான, பல்லவர்திருப்பணி செய்த, சீனர் கல்வெட்டு எழுதிய, அருள்மிகு தென்னாவர நாயனார் கோயிலை கத்தோலிக்க மத வெறியோடு இடித்தவன் தளபதி தோமை சொயிசா. அங்கே உலூயிசா தேவாலயத்தைக்கட்டினான்.

416 ஆண்டுகளுக்கு முன்பு கத்தோலிக்கத் தளபதி கான்ஸ்டன்ட்டைன்கச்சதீவில் அருள்மிகு கச்சாபகேச்சரர் திருக்கோயிலைத் தரைமட்டமாக்கினான்.

405 ஆண்டுகளுக்கு முன் இந்து அரசின் சங்கிலி மன்னனைத் தோற்கடித்த கத்தோலிக்க படைத்தளபதி இடீலீவரா யாழ்ப்பாணத்தில் 400 சைவக் கோயில்களை இடித்தான். அங்கே தேவாலயங்களைக் கட்டுவித்தான்.

மன்னாரில் திருக்கேதீச்சரத்தைத்தடயமேஇல்லாமல் முற்று முழுதாக அழித்தான்.

தோமை சொயிசா வழியில், கொன்ஸ்டன்ட்டையின் வழியில் இடிலீவரா வழியில், மத வெறியோடுஇந்துக்கோயில்களைத் தாக்கியோர் அழித்தோர் கொக்கிரித்தோர் வழியில் போரில் வெற்றி பெற்ற மதகளிப்பில், வெற்றியைக் கொண்டாடும்மெய்சிலிர்ப்பில் இலங்கை, சிங்கள புத்த நாடு என்கிறார் மேனாள் படைத்தளபதி சரத்வீரசேகரா.

வெற்றியும் தோல்வியும் இரவும் பகலும் போல, மாறி மாறி வருவன அறியாரோ, மேனாள் படைத்தளபதி சரத் வீரசேகரா?

போரின் வெற்றிக்குப் பின்னால் நிதானமும் பெருந்தன்மையும் மாவீரன் அலெக்சாண்டருக்கு இருந்தது. இலங்கையில் மாவீரன் எல்லாளனுக்கு இருந்தது.

அத்தகைய நிதானமும் பெருந்தன்மையுமே இலங்கையில் புத்தர் கூறிய அன்பையும் அறனையும் அருளையும் அறிவையும் பெருக்கும்.

இலங்கையின் அழிவுக்கான வாயிலாகப் புத்தர் சிலைகளை, புத்தசமயத்தை, புத்தரின் கொள்கைகளை சரத் வீரசேகரா நஞ்சாக விதைக்கிறார். படு தோல்வியையே காண்பார் என அவர் மேலும் தெரிவித்தார்.

## அடுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதாகவும்அவர்தெரிவித்தார்.

மே முதல் செப்டெம்பர் வரையினா தென்மேற்கு பருவமழைக் காலம் தொடங்கிவிட்டபோதுகூட கணிசமான மழை வீழ்ச்சிக் குறைவுஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். எல்நினோ உட்பட பலவேறு காரணங்களால் இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தென்மேல் பருவக் காற்றுத்தான் மேற்கு மாகாணம், மாத்தறை, காலி, சப்ரகமுவ, நுவரெலியா, குருநாகல, புத்தளம் ஆகிய பகுதிகளுக்கு மழையை - தண்ணீரைப் பெற்றுத் தருகின்றது.

**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**
**076 3983858**
**மின்னஞ்சல் முகவரி:**
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# நவீன நூலக நடைமுறை மூன்று நாள் பயிற்சிநெறி





தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்தில் கடமையாற்றும் கல்விசார் மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கான மூன்று நாள் பயிற்சிநெறி கிழக்குப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், கொழும்பு தேசிய நூலகம் , தேசிய ஆவணவாக்கள் சபை மற்றும் பேராதனை பல்கலைக்கழகம் போன்றவற்றில் பல்கலைக்கழக நூலகர் எம். எம். றிபாயுடீனின் பூரண ஏற்பாட்டில் பல்கலைக்கழக ஊழியர் மேம்பாட்டு நிலை யத்தின் பணிப்பாளர் கலாநிதி சல்பியா ஜலீலின் நெறிப்படுத்தலில் உபவேந்தர்பேராசிரியர்றமீஸ் அபூபக்கரின் அனுமதியுடன் நடைபெற்றது.

இந்தப்பயிற்சி நெறியின் முதல் நாள் அங்குரார்ப்பண நிகழ்வு கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் டாக்டர் ஜே. ஜெயராஜ் தலைமையில் நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் எம். எம். றிபாயுடீன் , சிரேஸ்ட உதவி நூலகர்களானஎம்.சி.எம். அஸ்வர், எஸ்.எல்.எம். சஜீர் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஸ்ட உதவி நூலகர்களான எம்.என். ரவிக்குமார், எஸ்.சாந்தரூபன், என். காயத்ரி, எல்.ஜெகதீஸ்பரன் மற்றும் நூலக உதவிப் பதிவாளர் வீ.பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்குரார்ப்பனநிகழ்வை ஆரம்பித்து உரையாற்றிய கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் டாக்டர் ஜே.ஜெயராஜ் தனதுரையில் -

தென்கிழக்குப்பல்கலைக்கழக நூலக உத்தியோகத்தர்கள் எமது கிழக்குப் பல்கலைக்கழகநூலகத்தைத் தெரிவுசெய்து எங்களது சேவைகள் மற்றும் வளங்கல் பற்றி அறிவதற்கும் அதிலிருந்து கற்றுக் கொள்வதற்குமாக வருகை தந்திருக்கின்ற தென்கிழக்கு பல்கலைக்கழக நூலக உத்தியோகத்தர்களை கிழக்கு பல்கலைக்கழக நூலகம் சார்பாக வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மேலும் இதனை ஒழுங்கு செய்து இங்கு அழைத்துவந்த பல்கலைக்கழக நூலகர் எம். எம். றிபாயுடீனுக்கு நான் நன்றி கூறுகின்ற அதேவேளை இவ்விரு பல்கலைக்கழக நூலக உத்தியோகத்தர்களும் தாங்கள் எதிர்காலத்தில் எமது இரு நூலகங்களுக்கு இடையில் ஏற்படுகின்ற தொழில் மற்றும் சேவைரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டுமென்றும் அதன்மூலம் மாணவர் களுக்கு ஒரு சிறந்த சேவையை வழங்குவது பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

இப்ப பல்கலைக்கழகம் 1981 ஆம் ஆண்டு பல்கலைக்கழக கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டு 1986 ஆம் ஆண்டு பல்கலைக்கழகமாக தரம் உயர்த்தப்பட்டதென்றும் அவ்வாறுதரம் உயர்த்தப்பட்ட பல்கலைக்கழக நூலகத்தை கட்டியெழுப்புவதில் தாங்கள் பாரிய சவால்களை எதிர்கொண்டதாகவும் அந்தசவால்களுக்கு எமது நூலக உத்தியோகத்தர்கள் தங்களாலான முழு ஒத்துழைப்புகளையும் அர்ப்பணிப்புடன் செய்ததை இங்கு சுட்டிக்காட்டி தனதுரையை முடித்தார். அதனைத் தொடர்ந்து தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகர் எம்.எம். றிபாயுடீன் பேசுகையில் -

முதலில் இவ்வாறான தொரு நிகழ்வை ஏற்பாடு செய்துதந்த பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கருக்கும் ஊழியர் மேம்பாட்டு நிலைய பணிப்பாளர் டாக்டர் சல்பியா ஜலீலுக்கும் நன்றி கூறி தொடர்ந்து பேசுகையில் கலாநிதி ஜெயராஜ் பேசியமை போல் இரு பல்கலைக் கழகங்களும் எமது தாய் மொழியில் சேவைகளை வழங்குபவர்களாக இருக்கின்றபடியால் எமக்குள் இருக்கின்ற நூலக சேவை வழங்கல்கள் சம்பந்தமான பிரச்சினைகளை இலகுவில் தீர்த்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும் அதன் மூலம் எமது மாணவர்களுக்கு ஒரு சிறப்பான நவீன நூலக நடைமுறைகள் சேவையை வழங்க முடியும். அதேபோல் ஊழியர்களும் தங்களுக்குள்ளான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்றும் எதிர்காலங்களில் இரு நூலகங்களும் சேர்ந்து தங்களுக்குள் வளங்களை பகிர்ந்துகொள்ள முடியும் என்றும் கூறினார்.

மேலும் நூலகர் றிபாயுடீன் கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் மற்றும் நூலக உத்தியோகத்தர்களை தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகத்துக்கு சிநேகபூர்வவிஜயமொன்றை மேற்கொள்ளுமாறும் அழைப்பொன்றை விடுத்திருந்தார். இறுதியாக நூலகர் எம்.எம். றிபாயுடீனால் கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்துக்கு தென்கிழக்கு பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட ஒரு தொகுதி நூல்கள் நூலகர் ஜெயராஜ் அவர்களிடம் அன்பளிப்பு செய்யப்பட்டது. இரு நூலகர்களினது உரையை தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர்களால் அங்குள்ள சேவைகள் மற்றும் வளங்கள் பற்றி தென்கிழக்கு நூலக உத்தியோகத்தர்களுக்கு விரிவான பயிற்சிகளையும், விளக்கங்களையும் கொடுத்தனர். (05)





# அரச குடிசார் தொழில்நுட்ப உத்தியோகத்தர் கூட்டம்

## கிழக்கில் நடந்தது

கிழக்கு மாகாண அரச குடிசார் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் மட்டக்களப்பு, கல்லடியில் அமைந்துள்ள தனியார் விடுதியொன்றில் பிரம்மாண்டமான முறையில் இடம்பெற்றது.

அச் சங்கத்தின் தலைவர் எஸ்.வரதராஜன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், அனுசரணையாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான மேற்படி கிழக்கு மாகாண அரச குடிசார் தொழில்நுட்ப உத்தி யோகத்தர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் வரவேற்புரை, தலைமையுரை என்பன நிகழ்த்தப்பட்டதுடன் சங்க உறுப்பினர்களின் சத்தியபிரமாண நிகழ்வும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து கடந்த பொதுக்கூட்டத்தின் கூட்ட குறிப்புகள், நிதிக் கூற்றுக்கள் என்பன முறையே சங்கத்தின் பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்டு, பொதுச்சபை உறுப்பினர்களின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

இந்தப் பொதுக் கூட்டத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கி வரும் நிர்வாக ரீதியான அழுத்தங்கள், பதவியுயர்வு தாமதங்கள், இடமாற்றங்கள் தொடர்பான பிரச்சினைகள் என பல்வேறு விடயங்கள் உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டு, பரிசீலிக்கப்பட்டதுடன், அது தொடர்பில் விடய அமைச்சுக்களின் ஊடாகத் தீர்வுகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கைஎடுப்பதுஎனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன். ஏனைய தொழில்சார் நாடளாவிய சேவைகள்போன்றுதொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சேவையையும் அங்கீகரிக்க வேண்டும் என்றும் அதற்கான அழுத்தங்களை ஏனைய தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கங்களின் துணையுடன் முன்னெடுப்பது என்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் தொழில் தகைமையை விருத்திசெய்தல், வேதன அதிகரிப்புக்கான ஏற்பாடுகளை ஆராய்தல் என பல்வேறு தீர்மானங்களும் இங்கு எட்டப்பட்டன.

அத்துடன், மேற்படி நிகழ்வின் அனுசரணையாளர்கள் அனைவரும் கிழக்கு மாகாணஅரசகுடிசார்தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கத்தினரால் நினைவு சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# பாடசாலை சமூகத்துக்கான மதிப்புகல்வி நிகழ்ச்சித்திட்டம்



முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சிசெயல்முன்னணி மற்றும் டைகோனியா அமைப்பு ஆகியவற்றின் அனுசரணையுடன் மதிப்பு கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மூன்றாம் கட்ட நிகழ்வு கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/அல்-ஜலால் வித்தியாலயத்தை மையப்படுத்தி தெரிவு செய்யப்பட்ட பாடசாலைக் குழாம், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பிரதேச மட்ட அதிகாரிகள் ஆகியோருக்கான செயலமர்வு பாடசாலை அதிபர் எம்.ஐ.எம் சைபுதீன் தலைமையில் சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலைகளில் அண்மைக் காலத்தில் எழுந்துள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் அவற்றில் முக்கியமாக மாணவர் வரவு ஒழுங்கீனம் மற் றும் இடைவிலகலை தவிர்ப்பதற்கும் மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்துத்துவதற்கும் பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டு அதனை ஓகஸ்ட் முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது கோட்டக் கல்விப்பணிப்பாளரும், கல்முனை வலய உதவிக்கல்வி பணிப்பாளருமான என்.எம். மலீக் விசேட அதிதியாகக் கலந்து கொண்டதுடன் நிகழ்வின் நெறிப்படுத்துநராக தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் பொறியியலாளர் கலாநிதி அஸ்லம் சஜா கலந்து கொண்டு நிகழ்வுகளை நெறிப்படுத்தியிருந்ததுடன் மேலும் விசேட பேச்சாளராக தஃவா ஸ்லாமிய கலாபீடத்தின் அதிபர் கலந்துகொண்டார். மேலும் இந்த நிகழ்வில் பாடசாலை பிரதி மற்றும் உதவி அதிபர்கள், பழைய மாணவர் சங்க நிர்வாகிகள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் உட்பட பலரும் கலந்து கொண் டனர்.

(05)







# அல்- ஹிதாயா மகா வித்தியாலயத்தில் திறந்த ஆராதனை வெளியரங்கு திறப்பு!

சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட நாவிதன்வெளி கோட்டக்கல்வி அலுவலகத்தின் கீழுள்ள சவளக்கடை வீரத்திடல் கமு/ சது/ அல்- ஹிதாயா மகா வித்தியாலயத்துக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறந்த ஆராதனை வெளியரங்கு கடந்த வியாழக்கிழமை உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு பாடசாலை அதிபர் திருமதி ஏ.எம்.முனாஸிர் தலைமையில் நடைபெற்றதுடன் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்வி பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.எம்.செய்யது உமர் மௌலானா மற்றும் கௌரவ அதிதியாக நற்பிட்டிமுனை அல்- கரீம் பவுண்டேசன் நிறுவனத்தின் நிறைவேற்றுபணிப்பாளரும் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சரின் முன்னாள் இணைப்புச் செயலாளருமான சீ.எம்.ஹலீம் (எல்.எல்.பி) ஆகியோர் கலந்துகொண்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறந்த ஆராதனை வெளியரங்கைத் திறந்து வைத்தனர்.

மேலும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறந்த ஆராதனை வெளியரங்கு தொடர்பில் பாடசாலை அதிபர் திருமதி ஏ.எம்.முனாஸிர், பிரதி அதிபர் அஷ்ஷெய்க் ஏ.எம்.சாலித்தீன் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுகுழு ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும் கல்முனை தொகுதி அமைப்பாளருமான சி.எம் முபீத் மற்றும் அல்- கரீம் பவுண்டேஷன்நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளரும் கைத்தொழில் மற்றும் வணிகஅமைச்சரின்முன்னாள்இணைப்புச் செயலாளருமான சீ.எம்.ஹலீம் (எல்.எல்.பி) ஆகியோரின் சொந்த நிதியில் இருந்து நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நிகழ்வின் ஆரம்பத்தில் அதிதிகள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து தேசிய கீதம் பாடசாலை கீதம் இசைக்கப்பட்டு நிகழ்வுகள் ஆரம்ப மாகின.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறந்த ஆராதனை வெளியரங்கு உத்தியோக பூர்வமாக அதிதிகளால் திறந்துவைக்கப்பட்ட பின்னர் நிகழ்வின் ஆரம்பத்தில் தலைமை உரையை அதிபர் மேற்கொண்டார். தொடர்ந்து மாணவர்களின் நிகழ்வுகள், அதிதிகள் உரைகள், நன்றியுரை என்பன இடம்பெற்றன. தொடர்ந்து குறித்த பாடசாலையின் பௌதீக வளங்களின் தேவை குறித்து கண்காணிப்புநடவடிக்கையில் பிரதம அதிதியாக வருகை தந்த சம்மாந்துறை வலயக்கல்வி பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.எம்.செய்யது உமர் மௌலானா ஈடுபட்டதுடன் பாடசாலை நூலகத்தில் உள்ள நினைவுக்குறிப்பில் பதிவுகளை மேற்கொண்டு பாடசாலை அதிபர் உட்பட நிர்வாகத்தினரை பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

இதில் ஆசிரியர்கள், அல்- கரீம் பவுண்டேஷன் நிறுவனத்தின் உறுப்பினர்கள் , மாணவர்கள் ,பழைய மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## காரணம் தேடும் ரணில்

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நாடாளுமன்றம் தீர்மானம் எடுக்கும் வகையில் கட்சித் தலைவர்கள் அவர்களது யோசனையைச் சமர்ப்பிப்பதற்கு இரண்டு வார கால அவகாசம் அரசுத் தலைவரால் வழங்கப்பட்டுள்ளது.

'13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் இருப்பது அரசுத் தலைவராகிய என்னிடமல்ல; நாடாளுமன்றத்திடம்' என்று அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சிக் கூட்டத்தில் கூறியிருந்தார்.

அதன்படி 13 ஐ நடைமுறைப்படுத்துவது தொடர்பான பொறுப்பை நாடாளுமன்ற உறுப்பினர்களின் கைகளில் ஒப்படைத்து காலத்தை இழுத்தடிக்கும் செயற்பாடு தொடங்கப்பட்டுள்ளது.

சனையை முன்வைப்பதற்குக் கட்சித் தலைவர்களுக்குஇரண்டுவாரகாலஅவகாசத்தைஅரசுத்தலைவர் வழங்கியுள்ளார். முன்வைக்கப்படும் யோசனைகளை பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான அமைச்சரவை உப குழு அந்த யோசனைகளை ஆராய்ந்து பார்த்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசுத்தலைவராகப்பதவியேற்றதும்மாசிமாதம்4ஆம் நாளுக்கு முன்பாக தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று அறிவித்தார் ரணில் விக்கிரமசிங்க. இதையடுத்து அவர் கூட்டிய முதலாவது அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை தான் நடைமுறைப்படுத்தாமல் இருக்க முடியாது என்று அறிவித்தார். ஆனால், இப்போது அதனைச் செயற்படுத்துவதற்கு கட்சித் தலைவர்களின் யோசனைகளைக் கேட்டுள்ளார்.

அடுத்த வருடம் தேர்தல்கள் நடக்கவுள்ள நிலையில் தமிழர்களுக்கு 13 ஊடாக எதையாவது கொடுத்தால் அது சிங்கள வாக்குகளில் பெரும் தாக்கத்தைச் செலுத்தும் என்கிற எதிர்பார்ப்பில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் அதற்குச் சாதகமான வெளிப்படுத்தல்களை, அதாவது 13 பிளஸுக்கான ஆதரவை அவர்கள் தெரிவிப்பது மிகக் கடினம். இதனைப் பயன்படுத்திக்கொண்டு காலத்தை இழுத்தடிக்கவும் 13 நடைமுறைப்படுத்தப்படாமைக்கான காரணம் நாடாளுமன்றமே என்று கூறித் தப்பிக்கொள்ளவுமான உத்தியாகவே அரசுத் தலைவரின் இந்த நகர்வைப் பார்க்க முடிகின்றது.

முதலில் இரண்டு வார காலம் யோசனைகளை முன்வைக்கப்போய்விடும். பின்னர் அந்த யோசனைகளை ஆராய்வதற்கு மேலும் இரண்டு வாரகாலம் கடந்துவிடும். அதற்கு மேலும் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. பதவிக்கு வந்த அரசுத் தலைவர்கள் எல்லோருமே இவ்வாறு 13ஐ நிறைவேற்றாமல் காலத்தைக் கடத்தியதைப் போன்றே ரணிலும் காலத்தை இழுத்தடிக்கக் காரணங்களைத் தேடிக்கொண்டிருக்கின்றார் என்பதே உண்மை.

ஏனெனில் அரசமைப்பில் ஏற்கனவே உள்ள, ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த, மத்திய ஆட்சியாளர்கள் திருப்பப் பெற்ற அதிகாரங்களை மீண்டும் வழங்க அரசுத் தலைவர் யாருடைய அனுமதியையும் பெறவேண்டிய அவசியம் ஏதுமில்லை. ஏற்கனவே அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எதிர்க்கட்சி இதற்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளது. அரசுத் தலைவருக்கு நாடாளுமன்றத்தில் பொது ஜன பெரமுனவின் பெரும்பான்மை ஆதரவு உள்ளது. எனவே பெரமுனவுடன் பேசி இந்த விடயத்தில் அதன் ஆதரவைப் பெற்றுக்கொண்டாலே 13ஐ நிறைவேற்றிவிட முடியும்.

அதைவிடுத்து யோசனைகள், அதனை ஆராய்வதற்கான குழு என்று காலத்தை இழுத்தடிப்பது தமிழர்களுக்கு ஒருபோதும் ஏற்புடையதல்ல. இப்படி இழுத்தடித்தபடியே அடுத்த அரசுத் தலைவர் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறமுடியும் என்று அரசுத் தலைவர் எண்ணினால் அது வெறும் கானல் நீராகவே சென்று முடியும்.



# அரிவியாறு (மேல்மல்வத்ஓயா) ஊடாக வடக்கிற்குள் மெல்ல நுழைகிறது சீனா


ந.லோகதயாளன்

மன்னார் மற்றும் வவுனியா மாவட்ட தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மல்வத்து ஓயா திட்டம் செயற்படுத்தப்படும் என்று அண்மையில் ஜனாதிபதி அறிவித்திருந்தார். வடக்கு - கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இடம்பெற்ற பேச்சின் போது வடக்கில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டம் தொடர்பாகத் தெரிவிக்கும் போது அவர் இது குறித்தும் தெரிவித்திருந்தார்.

இந்தத் திட்டம் சில ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கப்பட்டது. எனினும் கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக அது பின்னர் நிறுத்தப்பட்டது. இப்போது இந்தத் திட்டத்தைச் சீனாவிடம் கையளித்து முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அநுராதபுரத்தில் இருந்து வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களிற்கான குடிதண்ணீர் மற்றும் விவசாயத்திற்கு மழைக் காலங்களில் நீர் வழங்கும் ஆறாக இந்த அருவியாறு உள்ளது. 2009ஆம் ஆண்டு வன்னியில் முடிவுக்கு வந்த போரின் பின்னர் செட்டிகுளத்தில் உள்ள மெனிக் பாமில் அடைக்கப்பட்ட 3 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களில் பெரும்பகுதியினர் இந்த ஆற்றிலேயே நீராடினர். அதில் இந்தக் கட்டுரையை எழுதும் நானும் ஒருவன்.

மணலாறு இன்று எந்தவகையில் வெலிஓயாவாக மாறியதோ அதே



Source: Land Use Planning Division, Mahaweli Authority of Sri Lanka

வடிவிலேயே இந்த அருவியாறும் இன்று மல்வத்ஓயாவாக மாறிவிட்டது. அருவி ஆறு செட்டிகுளம் வழியாக பாயும் வரையில் அது வடக்கு மாகாணத்தின் ஆறாக இருந்தது. இப்போது அது மல்வத்து ஓயா திட்டத்துடன் சேர்க்கப்படுவதால், இனி இரு மாகாணங்களுக்கு இடையிலான ஆறாகப் பரிணாம வளர்ச்சியடைகிறது. அதன் காரணமாக மகாவலி அதிகார சபையின் கீழ் செல்கின்றது.

மகாவலி அதிகார சபையின் எதிர்காலத் திட்டம் என காட்டப்பட்டுள்ள ஐ வலயம் என இதற்கான வரைபடம் நீண்டகாலத்திற்கு முன்பே திட்டமிடப்பட்டுவிட்டது.

இந்த அருவி ஆறு அல்லது மல்வத்ஓயா திட்டம் தொடர்பிலே மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சில விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் அந்த மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினரான இ.சாள்ஸ் நிர்மலநாதனை நாடி இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்குமாறு வேண்டினர். இதனை ஏற்ற நாடாளுமன்ற உறுப்பினர் விவசாய அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதி களையும் அழைத்துக் கொண்டு அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து இந்தத் தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி தருமாறு கோரியுள் ளனர்.



இந்தத் திட்டம் சீனாவின் மூலம நடைமுறைப்படுத் தப்படவுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் விவசாயப் பிரதிநிதிகள் முன்னிலையிலேயே ஜனாதிபதி உறுதியளித்துள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது தெரிவித்திருந்தார்.

இவ்வாறு அமையவுள்ள இத்திட்டம் நடைமுறைக்கு வருமானால் செட்டிகுளத்திற்கும் தெற்கே தற்போது காணப்படும் 6 குளங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு பெரிய நீர்த் தேக்கமாக மாற்றப்படும். அவ்வாறு மாற்றப்பட்டு அங்கே நீர் தேக்கப்பட்டு மன்னார் கட்டுக்கரை வரையில் நீர் எடுத்து வரப்படும். இவ்வாறு வரும் திட்டத்தின் 40 வீதமான நீர் இப்பகுதி மக்களின் குடிதண்ணீருக்காகவும் 60 வீதமானவை விவசாயப் பாவனைக்கும் விநியோகிக்கப்படும்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 23 ஆயிரம் மில்லியன் ரூபா தேவை எனக் கணக்கிடப்பட்டது. திட்டம் தொடங்கப்பட்ட நிலையில் நிதி நெருக்கடி காரணமாக நிறுத்தப்பட்டது. தற்போது சீனா இந்தத் திட் டத்திற்கான செலவைக் கடனாக வழங்க முன்வந்துள்ளதுடன், திட்டத்தை தானே நிறைவேற்றித்தரவும் முன்வந்துள்ளது என்று ஜனாதிபதி மன்னார் விவசாயிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்திற்காக வவுனியாவிற்கு தெற்கே உள்ள 6 குளங்களையும் ஒருங்கிணைக்கும்போது அங்கிருந்து பல குடும்பங்கள் குடிபெயர வேண்டிய சூழல் ஏற்படும். இந்தக் குடும்பங்களில் தமிழ்க் குடும்பங்களை விடவும் சிங்களக் குடும்பங்களே அதிகம்.

இடம்பெயரவுள்ள சிங்களக் குடும்பங்களில் பெரும்பாலானவை, போர்க் காலத்தில் செயல்பட்ட ஊர்காவல் படையை சேர்ந்தவைகள். இதனாலேயே இந்தப் பகுதியில் குடியமர்த்தப்பட்டவர்கள். இவர்களை வவுனியா செட்டிகுளம் பிரதேசசெயலாளர் பிரிவின் கீழ் உள்ள முதலீயார்குளத்தில் குடியேற்ற முயன்ற சமயம் சர்ச்சை ஏற்பட்டுப் பின்னர் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலாளர் பிரிவில் வெளவாலை என்னும் பிரதேசத்தில் ஓர் சோழர் காலத்து சிவன்கோயிலிற்கு அருகில் இருந்த 2 ஆயிரம் ஏக்கர் காணியிலேயே குடியமர்த் தப்படவுள்ளனர்.

**இந்தத் திட்டம் சில ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கப்பட்டது. எனினும் கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக அது பின்னர் நிறுத்தப்பட்டது. இப்போது இந்தத் திட்டத்தைச் சீனாவிடம் கையளித்து முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**

இருப்பினும் இத் திட்டத்தின் ஊடாக மதவாச்சி மன்னார் வீதியின் தெற்குத் திசை முழுமையாக சிங்களக் குடியேற்றத்துக்காக இலக்கு வைக்கப்படுவதான அச்சமும் உள்ளது. செட்டிக்குளம் மெனிக்பாம் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இன்றுவரை விடுவிக்கப்படாமல் உள்ளமையும் சந்தேகத்தை வலுப்படுத்துகின்றது.

ஏற்கனவே செட்டிக்குளம் ஊடாக தந்திரிமலை வரையான பாதையில் செல்லும்போது சின்னச்செட்டிகுளம் வரையில் தற்போது நில சிங்களக் குடியேற்றங்கள் வலுகின்றது. சின்னச்செட்டிகுளம் என்பதும் முஸ்லிம் கிராமமாகும். சின்னச்செட்டிகுளம் வரையில் சிங்கள மக்கள் நகர்வதனால் சின்னச்செட்டிகுளத்தில் உள்ள முஸ்லிம் மக்கள் வடக்குத் திசை நோக்கி நகர்கின்றனர். இங்கிருந்து 5 கிலோ மீற்றர் தூரத்தில் முதலியார் குளத்தில் வசிக்கும் தமிழ் கிராமங்கள் இதனால் அச்சுறுத்தலுக்குள்ளாகி உள்ளன.

இந்த நிலையில்தான் அருவியாறு எனப்படும் மல்வத்துஓயா திட்டம் இந்தப் பகுதிகளுக்குள் ஊடுருவிப் பாயப்போகின்றது. இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டதும் இந்தப் பகுதிகள் அனைத்தும் மாகவலி அபிவிருத்தித் திட்டத்தின் கிழ் கொண்டுவரப்பட்டுவிடும்.

(தொடரும்)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chicken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Roty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# வெருகல் ஆற்றின் குறுக்கே அமைக்கப்படும் பால நிர்மாணத்தை உடன் நிறைவு செய்க

## அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் வலியுறுத்து





திருகோணமலை மாவட்டத்தில் வெருகல் ஆற்றின் குறுக்கே அமைக்கப்படும் கட்டையார் பாலத்தின் நிர்மாணப் பணிகளின் முன்னேற்றத்தைக் கண்டறியும் விஜயத்தை கிராம வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மேற்கொண்டார். வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பூரண மேற்பார்வையின் கீழ் உள்ளூர் ஒப்பந்த நிறுவனம் ஒன்றால் நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்த புதிய கட்டையார் பாலம் 25 மீற்றர் நீளமும் 5 மீற்றர் அகலமும் கொண்டது. இந்த பாலம் அமைப்பதற்கு 5 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது. நிர்மாணப் பணிகளைவிரைவாகநிறைவுசெய்து பொதுமக்களின்போக்குவரத்துக்காக பாலத்தை திறந்து வைக்கு மாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண அலுவலக அதிகாரிகள் மற்றும் ஒப்பந்த நிறுவன அதிகாரிகளுக்கு இராஜாங்க அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

இந்த கண்காணிப்பு விஜயத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண அலுவலக அதிகாரிகள் மற்றும் ஒப்பந்த நிறுவன அதிகாரிகள் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (05)

# கல்முனை பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டம்







கல்முனை பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் கடந்த வியாழக்கிழமை ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.எம்.முஷாரப் தலைமையில் கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலியின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.எல்.எம் அஸ்மி கணக்காளர் கே.எம் எஸ்.அமீர் அலி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், நாடாளுமன்றஉறுப்பினர்எச்.எம்.எம் ஹரீஸின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ பாவா, திணைக்களங்களின் பிரதிநிதிகள்,முப்படைகளின் பிரதிநிதிகள் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அரசாங்கத்தின் அஸ்வெசும தேசிய திட்டத்தில் கல்முனை பிரதேச செயலக பிரிவில் உள்ள குறைபாடுகள் மற்றும் தற்போதைய நிலை சம்பந்தமாக கலந்தாலோசித்து முடிவடுக்கப்பட்டது. அத்துடன் கல்முனை கடற்படையின் தளத்துக்கான மேலதிக காணி விடுவிப்பு செய்தல், நகர அபிவிருத்தி அதிகார சபையின் கோரிக்கைகள் மற்றும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய குறைபாடுகள் போன்ற பல விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டு முடிவுகளும் எடுக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். (05)





# விஞ்ஞானப் பாட ஆசிரியைக்கு சேவை நலன் பாராட்டு விழா!

கல்முனை கல்வி வலய மாளிகைக்காடு கமு/கமு/சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் பயிற்றப்பட்ட விஞ்ஞானபாடஆசிரியையாக கடமையாற்றி வந்த திருமதி ஜெமீலா இஸ்மாலெவ்வை தனது 60 வயதைப் பூர்த்தி செய்ததன் காரணமாக ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் தனது முதல் நியமனத்தை 1992.06.25 ஆம் கதி ஆசிரியையாக சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் கடமையேற்று அப்பாடசாலையில் 2001.05.14 ஆம் திகதி வரை சுமார் 9 வருடங்கள் சேவையாற்றிய பின்னர் 2001.05.15 ஆம் திகதி கமு/கமு/சாய்ந்தமருது மல்ஹருல் ஸம்ஸ் வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று 2009.05.31 வரை சுமார் 8 வருடங்கள் சேவையாற்றியுள்ளார்.

அதன் பின்னர் கமு/கமுஃசாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்திற்கு 2009.06.01 ஆம் திகதி இடமாற்றம் பெற்று 2018.03.01ஆம் திகதி வரை சுமார் 09 வருடங்கள் கடமையாற்றியுள்ளார். அதன்பின்னர் மாளிகைக்காடு கமுஃகமு/சபீனா முஸ்லிம் வித்தியாலயத்துக்கு 2018.03.02 ஆம் திகதி இடமாற்றம் பெற்று 2023ஃ07ஃ23 ஆம் திகதி வரை சுமார் 5 வருடங்கள் தனது அர்ப்பணிப்பான சேவையை செய்துள்ளது மட்டுமன்றி இப்பாடசாலையில் கடமையாற்றிய காலத்தில் தனது சொந்த நிதியிலிருந்து பாடசாலையின் கணணி ஆய்வுகூட அபிவிருத்தி, மற்றும் வசதி குறைந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல் போன்ற சமூக சேவை விடயங்களிலும் அதிக பங்களிப்பு செய்துள்ள இந்த ஆசிரியையின் சேவையை பாடசாலை சமூகம் நன்றியுடன் நினைவுகூர்ந்து வாழ்த்துக்களையும் தெரிவித்து பாராட்டி பிரியாவிடை வழங்கியுள்ளது. (05)

# வடக்கு – கிழக்கு மாகாணங்களே தமிழருக்குப் பாதுகாப்பான இடம்

வடக்கு, கிழக்கே இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு பாதுகாப்பான இடம் என்பதை வெளிப்படுத்திய நாளாக ஜூலை கலவர நாள் அமைந்ததாக மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் செயலாளர் அருட்தந்தை க.ஜெகதாஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு அமெரிக்க மினில் நடைபெற்ற ஜூலை கலவரத்தில் படுகொலைசெய்யப்பட்டவர்களின் நிணைவேந்தல்நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

திருநெல்வேலி, தபால்பெட்டி சந்தியில் நடத்தப்பட்ட இராணுவத்திற்கு எதிரான கண்ணிவெடி தாக்குதலுடன் ஜூலை கலவரம் ஆரம்பித்துவைக்கப்பட்டது. ஆனால் இந்த ஜூலை கலவரம் கட்டவிழ்த்துவிடப்படுவதற்கு கண்ணி வெடி தாக்குதல்தான் காரணம் அல்ல. அரசால் மிகவும் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

ஜூலை கலவரம் நடைபெறுவதற்கு முன்பாக யாழ்.பல்கலைகழகத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்களும் இராணுவமும் படுகொலைசெய்யப்பட்டதாக தெற்கில் வதந்திகள் பரப்பப்பட்ட நிலையில் பொரளையில் இராணுவத்தின் இறுதிக்கிரியைகள் நடைபெற்றதன் பின்னர் 26 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த குட்டிமணி ,தங்கத்துரை,ஜெகன் உட்பட 53 தமிழ் அரசியல் கைதிகள் சிறைக்காவலர்களின் அனுசரணையுடனும் சக அரசியல் கைதிகள் தாக்குதல் மேற்கொண்டு படுகொலைசெய்தனர். கறுப்பு ஜூலையின் தொடக்க சம்பவம் அதுவாகும். அதன் பின்னர் கொழும்பு தலைநகரில் 3 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டதுடன் அவர்களின் சொத்துகள் சூறையாடப்பட்டன.

அதனைத் தொடர்ந்து மலையக மக்களும் கொன்றொழிக்கப்பட்டனர். இன்று நாங்கள் அவர்களின் 200 ஆவது ஆண்டை நினைவுகூர்ந்துவருகின்றோம்.

மலையக மக்கள் செறிந்து-வாழும் பகுதிகளில் அவர்களின் லயன்குடியிருப்புகள் அழிக்கப்பட்டு படுகொலைசெய்யப்பட்டார்கள். அதன்போது மலையக மக்களும் கொழும்பு தமிழ் மக்களும் வடக்கு கிழக்கிற்கு புகழிடம் தேடிவந்த நாளாகவும் இது காணப்படுகின்றது.

சிவில் சமூக செயற்பாட்டாளரும் மட்டக்களப்பு அமெரிக்க மின் மேலாளருமான அருட்தந்தை லூத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் செயலாளர் அருட்தந்தை க.ஜெகதாஸ், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், அருட்தந்தையர்கள், சிவில்சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர். ஜெகன் உட்பட 53 தமிழ் அரசியல் கைதிகள் சிறைக்காவலர்களின் அனுசரணையுடனும் சக அரசியல் கைதிகள் தாக்குதல் மேற்கொண்டு படுகொலைசெய்தனர். (05)




OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FREEDOM
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்

# விசேட தேவையுடைய மாணவர்கள் கல்விகற்கும் இடங்களில் போதிய வசதி ஏற்படுத்திகொடுக்குக

## கூட்டுறவு ஆணைக்குழு உறுப்பினர் தெரிவிப்பு







விசேட தேவையுடைய அல்லது மாற்றுத்திறனாளி சிறுவர்கள், மாணவர்கள் கல்விபயிலும் பாடசாலைகள் அந்த பிள்ளைகள் கல்விகற்க ஏதுவான இடமாக மாற்றியமைக்கப்படவேண்டிய தேவை உள்ளது. அவர்கள் விளையாடும் வகையில் விளையாட்டுத்திடல் அமைக்கவேண்டிய தேவைகள் தொடர்பிலும், அவர்களுக்கு ஏற்படுத்தி கொடுக்கவேண்டிய அவசிய தேவைகள் தொடர்பிலும் அரச உயர்மட்டங்களுக்கு தான் முன்மொழிவுகளை முன்வைக்க உள்ளதாக கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினர் யூ.எல்.என். ஹுதா உமர் தெரிவித்தார்.

பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மற்றும் கடந்த தவணை பரீட்சையில் சிறந்த புள்ளிகளை பெற்று முதல்நிலை அடைந்த சாய்ந்தமருது கமு/கமு/ரியாழுள் ஜன்னா வித்தியாலய மாணவர்களை பாராட்டி கௌரவித்து பரிசில்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எஸ். அலி சப்ரி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர் -

இப்போது பாடசாலைகளில் நிறைவான இளம் ஆசிரியர்கள் உள்ளார்கள். அவர்கள் புத்தகங்களை மட்டும் அன்றி தேடல்கள் நிறைந்தவர்களாகவும் உள்ளனர். இப்படியான தேடல்மிக்க ஆசிரியர்களிடம் கல்விபயிலும் மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்தவர்களாக மிளிர்வார்கள். அந்தவகையில் சாய்ந்த மருது கமு/கமு/ ரியாழுள் ஜன்னா வித்தியாலயம் இந்தப் பிராந்தியத்தில் உள்ள ஏனைய பாடசாலைகளை விட இறைவனுக்கும் சமூகத்துக்கும் நெருக்கமான பாடசாலையாக உள்ளது. இங்கு கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்கள் சிறப்பாக கவனிக்கப்படுவது மகிழ்ச்சியளிக்கிறது. அந்த மாணவர்களைக் கையாளும் ஆசிரியைகள் தாய்க்கு நிகராக அவர்களைக் கவனிப்பது ஆசிரியப்பணிக்கு மகுடமாக அமைந்துள்ளது.

விசேட தேவையுடைய அல்லது மாற்றுத்திறனாளி சிறுவர்கள், மாணவர்கள் கல்விபயிலும் பாடசாலைகள் அந்த பிள்ளைகள் கல்விகற்க ஏதுவான இடமாக மாற்றியமைக்கப்படவேண்டிய தேவை உள்ளது. இப்பாடசாலையிலும் அப்படியான தேவைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டியுள்ளது. அவர்கள் விளையாடும் வகையில் விளையாட்டுத்திடல் அமைக்கவேண்டிய தேவைகள் தொடர்பில் அரச உயர்மட்டங்களுக்கு நான் முன்மொழிவுகளை முன்வைக்க உள்ளேன். பின்தங்கிய, கரையோரப்பிரதேச மாணவர்கள், விசேட தேவையுடைய மாணவர்கள் கல்வியில் பின்தங்கியவர்கள் எனும் பொதுவான கூற்று ஏற்றுக்கொள்ள முடியாதது. அம்பாறை மாவட்டத்திலும் சரி ஏனைய கரையோர பிரதேசங்களிலும் சரி கரையோரத்தை சேர்ந்த பின்தங்கிய பிரதேசங்களை சேர்ந்த மாணவர்கள் கடந்த காலங்களில் வரலாற்று சாதனை படைத்துள்ளனர். கல்விக்கு ஏழ்மை தடையல்ல என்பதை கடந்த காலங்களில் சாதித்த பலருடைய சாதனைகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். - என்றார்.

தமிழ் தினப்போட்டியில் பல்வேறு அடைவுகளை பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்ட இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி அலுவலக பாடசாலை இணைப்பாளர் எம்.எம். ஷியாம், தொழிலதிபர் எம்.எம். ரஸீன் உட்பட பாடசாலை உப அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (05)

## நூல் வெளியீடு

கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவையின் ஏற்பாட்டில் 'பேராசிரியர் மர்ஹூம் எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ் - வாழ்வும் பணியும்' நூல் வெளியீட்டு விழா திங்கட்கிழமை தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழிநுட்ப பீடத்தின் கேட்போர் கூடத்தில் கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவையின் தலைவரும், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கை அரபு மொழி பீடத்தின் முன்னாள் பீடாதிபதியுமான பேராசிரியர் எம்.எஸ்.எம். ஜலால்தீன் தலைமையில் நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, சிறப்பு அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் ஆகியோர் கலந்துசிறப்பித்ததுடன் பேராசிரியர் எம்.பி.எம்.இஸ்மாயில் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். நூல் அறிமுக உரையை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை,கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் நிகழ்த்தினார்.

விரிவுரையாளர் எம்.அப்துல் றஸாக் கவிதை பொழிந்ததுடன் பிரதம அதிதி மற்றும் சிறப்பதிதி ஆகியோரின் உரைகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் பல்கலைக்கழக பீடாதிபதிகள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், நூலகர், ஊவா வெல்லச பல்கலைக்கழக பதிவாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர்கள், பேரவை உறுப்பினர், முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.ரீ. ஹசன் அலி, இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (05)

## முதிரை மரப் பலகைகளுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது

கிளிநொச்சியில் பலலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரப்பலகைகளுடன் ஒருவர் நேற்று (செவ்வாய்க்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி புன்னை நீராவி பகுதியில் நபர் ஒருவர் சட்டவிரோதமான முறையில் மரப்பலகைகள் வைத்திருப்பதாக வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்தே விசேட அதிரடிபடையினரால் இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பல லட்ச ரூபா பெறுமதியான முதிரை பலகைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட நபர் நேற்று கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தபட்டதுடன் தடையப்பொருள்கள் இன்று (புதன்கிழமை) நீதிமன்றில் ஒப்படைக்கப்படவுள்ளன எனவும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (05)

## ஆஸி. உயர்ஸ்தானிகருடன் ஆளுநர் செந்தில் சந்திப்பு!

ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ் மற்றும் பிரதி உயர்ஸ்தானிகர் லலிதா கபூரைக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத் துறை, மீன்பிடி துறை, கனிம வளம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் பசுமை ஹைதரசன் போன்ற திட்டங்களை ஆஸ்திரேலிய அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளதாக உயர்ஸ்தானிகர் போல் தெரிவித்துள்ளார். (05)





## வட்டவளையில் பஸ் விபத்து! 18 பேர் காயம்

கொழும்பிலிருந்து நுவரெலியா நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை சிங்கள வித்தியாலயத்திற்கு அருகில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொழும்பிலிருந்து நேற்று நள்ளிரவு 12 மணியளவில் பயணிகளை ஏற்றிக் கொண்டு நுவரெலியா பகுதிக்கு சென்ற குறித்த பஸ் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை 4.40 மணியளவில் பாதையை விட்டு விலகி சுமார் 10 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தின் போது, பஸ்ஸில் 120 பேர் வரை பயணித்துள்ளனர். எனினும் 18 பேர் படுங்காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

பஸ்ஸில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாகவே பஸ் கட்டுப்பாட்டை இழந்ததால் இந்த விபத்து நேர்ந்ததாக நேரடி விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த 18 பேரும், வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் ஆரம்ப சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பின் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனவும், அங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விபத்து தொடர்பில் வட்டவளை போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

## வைத்தியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஆளுநர் செந்தில் தொண்டமான் கவனத்துக்கு





அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கிழக்கு மாகாணத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்திற்கு விஜயம் செய்து வைத்தியர்கள் மற்றும் சுகாதார அதிகாரிகள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகள் குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடன் கலந்துரையாடல் மேற்கொண்டனர்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு மாகாணசபை அதிகாரிகளுக்கு செந்தில் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஐக்கிய தேசியக் கட்சியை பெரமுனவினர் ஏற்கார்கள்

## திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டு

எதிர்வரும் காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயமாக தோல்வியடையும் என்பதால் அவர்களை மொட்டுக் கட்சியினர் கூட ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் எனநாடாளுமன்றஉறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவிடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'ஐக்கியதேசியக்கட்சிக்கு நாட்டின் அதிகாரத்தை ஒப்படைக்கும் அளவுக்கு, மக்கள் ஆணை இன்னமும் கிடைக்கவில்லை.

மக்கள் அமைதியாக இருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால், அடுத்தஜனாதிபதித்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியை மக்கள் நிச்சயமாக வெற்றியடையச் செய்வார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி வெற்றிபெறும் என்பதில் சந்தேகம் இல்லை. எனவே, ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயமாக தோல்வியடையும்.

அவர்களை மொட்டுக் கட்சியினர்கூடஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.-எனஅவர்மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)




# வவுனியா கொலைகள்; சந்தேகத்தில் ஐவர் கைது

வவுனியா, தோணிக்கல் பகுதியில் பிறந்தநாள்நிகழ்வுநடைபெற்றுக்கொண்டிருந்த வீட்டுக்கு தீ வைத்த சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

வவுனியா பொலிஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் வவுனியா பிரிவு குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள்திடீர்சுற்றிவளைப்பை மேற்கொண்டு குற்றச்செயல்களுக்கு உதவிய 3 மோட்டார் சைக்கிள்களுடன் சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

அந்தவகையில், வவுனியாவைச் சேர்ந்த 24, 27, 31 மற்றும் 34 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 23 ஆம் திகதி பிறந்தநாள் நிகழ்வொன்று நடைபெற்ற வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் கூரிய ஆயுதத்தால் அங்கிருந்தவர்களைத் தாக்கி, குறித்த வீட்டையும் தீவைத்து எரித்திருந்தனர். இதன்போது, வீட்டில் இருந்த 10 பேர் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளம் தம்பதியினர் உயிரிழந்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த 2 வயதுடைய ஆண் குழந்தையும், 7 மற்றும் 13 வயதுடைய பெண் பிள்ளைகளும், 19 முதல் 41 வயதுக்கு இடைப்பட்ட 4 பெண்களும், 42 வயதுடைய ஆண் ஒருவரும் வவுனியா வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். வீட்டிற்கு தீ வைப்பதற்கும் குடியிருப்பாளர்களைத் தாக்குவதற்கும் முகமூடிஅணிந்தகுழுவொன்றுவரும்சிசிடிவி காட்சிகள் பொலிஸாருக்கு கிடைத்துள்ளதுடன், விசாரணைகளின் மூலம் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)



# குருதிக் கொடை நிகழ்வு யாழில்

யாழ்ப்பாணம் வடமராட்சி புலோலி வட மேற்கு முருகன் கோயிலடி அறிவகம் சன சமூக நிலையத்தின் 68 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று (செவ்வாய்க்கிழமை) குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

அறிவகம் சன சமூக நிலையத்தின் தலைவர் தங்கராசா அரவிந்தன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் கரவெட்டி பிரதேச வைத்தியசாலையின் மருத்துவர் குழு குருதியைப் பெற்றுக்கொண்டனர்.

இதில் அறிவகம் சன சமூக நிர்வாகத்தினர், கிராம மக்கள் மற்றும் அயல் கிராம மக்கள் ஆர்வத்துடன் குருதிக் கொடை அளிப்பதை அவதானிக்க முடிந்தது. (05)

# சுகாதாரத்துறையின் முறைமைகளை மீளாய்வுக்குட்படுத்த ஆளுநர் பணிப்பு

வடமாகாண சுகாதார சேவைகள் துறையை மீளாய்வுக்கு உட்படுத்தி வினைத்திறனுடன்செயற்பட வைக்குமாறு வடமாகாண ஆளுநர் பி.எஸ்எம்.சாள்ஸ் பணித்துள்ளார்.

வட மாகாணத்தில் சுகாதாரத் துறை முறைமைகள் பற்றிய கரிசனைகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் தலைமையில் வட மாகாண பிரதம செயலாளர், சுகாதார அமைச்சு செயலாளர், மாகாண சுகாதாரப் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், மற்றும் வைத்தியஅதிகாரிகளின்பங்குபற்றுதலுடன் திங்கட்கிழமை கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சேவை நாடுவோருக்கான சிகிச்சை, முகாமைமற்றும்புனர்வாழ்வு என்ற விடயங்கள் சுகாதார சேவைநிலையங்களில்ஒரே விதமாக நோக்கப்படலாகாது என்றும் அவை வெவ்வேறான முறைமைகள் ஊடாக அணுகவேண்டியவை என்பதை வலியுறுத்துவதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

அத்துடன் வைத்தியர்களின் விடுப்பு நேர பதிலீடு, உணவு பாதுகாப்பு, வெளிநோயாளிகள் முறையாக மருந்துகளை பெற்றுக் கொண்டு அதனை கிரமமாக உபயோகிப்பதற்கான கண்காணிப்பு, அவசர அம்புலன்ஸ்களின் பராமரிப்பு, சுகாதார சேவைப் பணிமனைகளின் ஊடாக வழங்கப்படும் சேவைகள், உள்ளூராட்சி மன்ற சேவைகளில் சுகாதார சேவை பணிமனைகளின் காத்திரமான ஈடுபாடு என்பன எவ்வளவு வினைத்திறனாக நடைபெறுகின்றன என்பது பற்றியும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களிடம் ஆளுநர் கேட்டறிந்ததுடன் அந்த முறைமைகள் அடிக்கடி மீளாய்வுக்குட்படுத்தி,பொதுமக்களுக்கான சேவைகளை வினைத்திறனாக வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

வட மாகாண பிரதம செயலாளர் தூஷார மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களை நியமனம் செய்ய நடவடிக்கைகள் படிப்படியாகஎடுக்கப்படும்என்றார்.

அத்துடன், பாடசாலைகளில் சுகாதார நிலைமைகள்பற்றிக்கேட்டறிந்தஆளுநர், அதிகாரிகள் பாடசாலைகளில் குடிநீர், சுகாதாரம், சுத்தம், ஆரோக்கியம் என்பவற்றில் அதிக கரிசனை கொள்ள வேண்டும்என்றும்கூறினர்.

மேலும் பாடசாலை மாணவர்களுக்கு இன்றைய போட்டிக்கல்வி முறை உளவியல் ரீதியான பாதிப்புகளை உருவாக்குவது பற்றியும் ஆளுநருடன் கலந்துரையாடினர். ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பிள்ளைகளின் ஆரோக்கியம் தொடர்பாக அறிந்து கொள்வதற்குரிய முறைமைகளை உருவாக்க வேண்டும் என்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

பொதுமக்களின் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளுக்கு வெவ்வேறு துறையினரும் இணைந்து செயற்பட்டு தீர்வுகளைக் காண வேண்டியதன் அவசியத்தையும் ஆளுநர் எடுத்துரைத்திருந்தார். (05)





# போராட்டக்காரர்களின் பிரதான நோக்கம் நாட்டை வீழ்த்துவதே

## நாமல் ராஜபக்ஷ சாடல்

போராட்டத்தை ஏற்பாடு செய்தவர்களின் பிரதான நோக்கமாக நாட்டை வீழ்த்தி விட வேண்டும் என்பதுதான் இருந்தது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

போராட்டத்தை ஏற்பாடு செய்தவர்களின் பிரதான நோக்கமாக நாட்டை வீழ்த்தி விட வேண்டும் என்பதுதான் இருந்ததே ஒளிய, நாட்டை முன்னேற்றுவது அல்ல.

நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பில் மாற்றமொன்றை ஏற்படுத்த வேண்டும் என்று உண்மையாக போராட்டம் நடத்திய தரப்பினரைக்கூட, சில அரசியல் கட்சிகள் திசை திருப்பின.

அன்று எமது வீடுகளை எரித்தார்கள். வீடுகளை எரித்தவர்களுக்கு வெளிநாடுகளுக்குச் சென்று தொழில் செய்யக்கூட முடியாமல் உள்ளது.

ஏனெனில், அவர்கள் மீது பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆனால், இதற்குத் திட்டமிட்ட தரப்பினர் இன்னமும் நாடாளுமன்றுக்கு வருகை தந்துகொண்டிருக்கிறார்கள். குறைந்தது, அவர்களிடம் வாக்குமூலம்கூட பெறப்படவில்லை. -என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# காரைநகர் பிரதேச முன்னாள் தவிசாளர் பாலச்சந்திரன் மீது தாக்குதல் முயற்சி

காரைநகர்பிரதேசசபை முன்னாள்தவிசாளர்கணேச பிள்ளை பாலச்சந்திரன் மீது தாக்குதல் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

காரைநகர் ஆலடி சந்தியில் பிரதேசசபையின் அனுமதியின்றி சட்டவிரோதமாக மீன் சந்தைக் கட்டடம் ஒன்று அமைக்கப்படுவதாககிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸாருக்கும் பிரதேச சபை செயலாளருக்கும் முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர் க.பாலச்சந்திரனால் முறைப்பாடு செய்யப்பட்டும் உரியநடவடிக்கை எடுக்கப்படாமையால் குறித்த பகுதிக்கு அவரே நேரடியாக திங்கட்கிழமைசென்றார்.

இதன்போதேகாரைநகர் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் மீது தாக்குதல் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திலும் வடக்கு மாகாண பிரதம செயலாளரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக பூரண அறிக்கை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு பிரதம செயலாளர் உத்தரவிட்டதுடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பிரதேசசபைசெயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கட்டடத்தை இடித்து அகற்றுவதற்கும்நடவடிக்கை எடுப்பதாக முன்னாள் தவிசாளரிடம் பிரதம செயலாளர் உறுதியளித்தார்.

கடந்த ஜனவரி மாதத்தில் மக்கள் நலன் கருதி சபைநிதி மூலம் சக்கலாவோடையில் நவீன முறையில்மீன்சந்தைஅமைக்கப்பட்டும்இதுவரைஒருசில வர்த்தகர்களின்தூண்டுதலால் மீன் வியாபாரிகள் புதிய மீன் சந்தைக் கட்டடத்திற்கு வருவதைத்தவிர்த்து வருகிறார்கள் எனவும் பிரதம செயலாளருக்கு சுட்டிக்காட்டப்பட்டன. (05)

# விமான சேவைகள் தொடர்பாக அமைச்சரவையின் அங்கீகாரம்

இந்தியாவின் கொச்சி சர்வதேச விமான நிலையம் மற்றும் இந்தோனிசியாவின் ஜகார்த்தா சர்வதேச விமான நிலையங்களில் ஸ்ரீலங்கன் விமான நிறுவன விமானங்களுக்கான சேவைகளைப் பெற அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தால் இந்தியாவின் கொச்சி மற்றும் இந்தோனிசியாவின் ஜகார்த்தா சர்வதேச விமான நிலையங்களில் விமானப் பயணிகள் மற்றும் நடமாடும் விமான மின்னுயர்த்தி மற்றும் பொருள்களை ஏற்றி இறக்கல்கள் போன்ற பிரிவுகளுக்காக சேவை வழங்குநர்களைத் தெரிவுசெய்வதற்கான விலைமுறி கோரப்பட்டுள்ளது.

அதற்கமைய அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய கொச்சி சர்வதேச விமான நிலையத்தில் சேவை வழங்கல் ஒப்பந்தத்தை ஏஐ எயாபோட் சேர்விஸ் லிமிட்டெட்டுக்கு வழங்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தோனேசியாவின் ஜகார்த்தா சர்வதேச விமான நிலையத்தில் சேவை வழங்கும் ஒப்பந்தம் கபுரா அங்கச நிறுவனத்திற்கு வழங்குவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)

# யாழ்ப்பாணத்தில் காய்ச்சலால் 3 பிள்ளைகளின் தாய் இறப்பு

யாழில் தொடர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம், உரும்பிராய் தெற்கை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான சுகந்தன் ஜான்சி எனும் 46 வயதான பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் கடந்த சில தினங்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில். தனியார் வைத்திசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் காய்ச்சலின் தீவிர தன்மை அதிகரித்தமையால் யாழ்.போதனா வைத்தியசாலையில் திங்கட்கிழமை சேர்க்கப்பட்ட நிலையில் ,அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். (05)

# இலங்கை பிரஜைகளை கடத்துவதற்கு முயற்சி

பாலஸ்தீனிய பிரதேசங்களுக்குள்சட்டவிரோத பணிக்காக இலங்கையர்கள் அழைத்துசெல்லப்படவிருந்த நிலையில் , ஜோர்தானில் இருந்து அதன் மேற்குக் கரைக்கு இலங்கைப் பிரஜைகள், 43 பேரை கடத்தும் முயற்சியை ஜோர்தான் பாதுகாப்புத் துறையினர் முறியடித்துள்ளனர்.

அதேநேரம் ஆரம்ப விசாரணைகளுக்குஅமைய மனிதகடத்தல்குற்றச்சாட்டின் கீழ் மூன்று இடைத்தரகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனஜோர்தான்ஊடகம்ஒன்று அறிவித்துள்ளது.

குறித்தஇலங்கையர்கள் மனித கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டு, அவர்களுக்குத் தேவையானபாதுகாப்பையும் ஆதரவையும்ஜோர்தான்அதிகாரிகள் வழங்கியுள்ளனர். (05)

# கோழி இறைச்சி விலை குறைப்பு

கோழி இறைச்சியின் விலையை 100 ரூபாவால் குறைக்க தயார் என கோழிப்பண்ணையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் விவசாய அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர். (05)

# கோழி இறைச்சி இறக்குமதிக்கு கலந்துரையாடலில் அங்கீகாரம்

கோழி இறைச்சி இறக்குமதிக்கு அனுமதி வழங்க தீர்மானித்துள்ளதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வர்த்தக அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டுகருத்துதெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடந்த 27 ஆம் திகதி ஜனாதிபதியால் நடத்தப்பட்ட வாழ்க்கைச் செலவு தொடர்பான விசேட கலந்துரையாடலின் போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், சந்தையில் கோழி இறைச்சி விலை உயர்வால் மக்கள் எதிர்நோக்கும்இன்னல்களை குறைக்கும் வகையில் அரசாங்கம் இத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# நாடளவில் 150 எரிபொருள் நிலையங்களுடன் செயற்பாடுகளை ஆரம்பித்தது சினோபெக்

சினோபெக் நிறுவனத்தின் முதலாவது எரிபொருள் தொகுதிஇறக்கும்பணிநேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரண்டாவது எரிபொருள் தொகுதி இன்று வரவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

உள்நாட்டு சந்தையில் புதிய சில்லறை விற்பனையாளர்களின் நுழைவு பெற்றோலியப் பொருள்களுக்கான அந்நியச் செலாவணி தேவைகளை எளிதாக்கும் என்று எரிசக்தி அமைச்சர் கூறியுள்ளார்.

எரிபொருள்நிரப்புநிலைய விநியோகஸ்தர்களுடனான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டு இறுதி செய்யப்பட்டதன் பின்னர் நாடளாவிய ரீதியில் 150 எரிபொருள் நிலையங்களுடன் செயற்பாடுகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.08.2023இல் வெளியிடப்பெற்றது.